பக்கங்கள் : ஆறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 22 சனிக்கிழமை (05.05.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 159

## பிரிட்டனின் முடிவு: இலங்கை கவலை

### அதன் பின்னணி குறித்து அரசு ஆராயுமாம்

கொழும்பு, மே 5

இலங்கைக்கான நிதி உதவியை பிரிட்டன் முடக்கியமை தொடர்பாக இலங்கை அரசு ஆராயவுள்ளதாக அரசின் பாதுகாப்புப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

அரசு மனித உரிமை மீறல் நடவடிக்கை எதிலும் ஈடுபடவில்லை. நாட்டில் பயங்கரவாதம் நிலவுகின்ற போது, அப்பயங்கரவாதத்திலிருந்து இந்த நாட்டையும் நாட்டு மக்களையும் காப்பாற்ற வேண்டியது அரசின் கடமை.

அதற்கான பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியம். அதைத்தான் அரசு தற்போது செய்துகொண்டிருக்கின்றது.

(06ஆம் பக்கம் பார்க்க)

## அனைத்துக் கட்சிகளின் யோசனைகள் மூலம் சரியான இணக்கத்தை ஏற்படுத்த முடியும்

### அமைச்சர் திஸ்ஸ விதாரண நம்பிக்கை

கொழும்பு, மே 5

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து சகல கட்சிகளினதும் யோசனைகளிலிருந்து சரியான இணக்கம் ஒன்றினை ஏற்படுத்த முடியும் என்று அனைத்துக் கட்சிக் குழுவின் தலைவர் அமைச்சர் திஸ்ஸ விதாரண நம்பிக்கை வெளியிட்டிருக்கின்றார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் அதிகாரத்தைப் பரவலாக்குவது தொடர்பான முனைப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. ஸ்ரீலங்கா சு.கவின் யோசனையை ஜே.வி.பி. நிராகரித்திருக்கின்றது. மஹிந்த சிந்தனையின் அடிப்படையில் அது அமையவில்லை என்ற காரணத்திலேயே இந்த யோசனையை ஜே.வி.பி. நிராகரித்துள்ளது.

இந்நிலையில், நேற்று சமர்ப்பிக்க ஏற்பாடாகியிருந்த சு.கவின் தீர்வு யோசனைகளையும் (06ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமைகளைப் பேணத் தவறியதால் இலங்கைக்குக் கிடைத்த முதல் தண்டனை

### பிரிட்டன் நிதி முடக்கம் குறித்து ஐ.தே.க. கருத்து

கொழும்பு, மே 5

''இலங்கைத் தமிழர்களினதும் ஏனைய இன மக்களினதும் அடிப்படை உரிமைகளை இலங்கை அரசு மீறிவருவதன் காரணமாகவே பிரிட்டன் இலங்கைக்கான அதன் நிதி உதவியை முடக்கியுள்ளது. இலங்கை அரசின் மனித உரிமை மீறல் நடவடிக்கைக்காக சர்வதேச நாடுகள் இலங்கை அரசுக்கு வழங்கவிருக்கும் தண்டனையின் முதல் கட்டமே இந்த நிதி உதவி முடக்கம்.''

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல, இலங்கைக்கான நிதியுதவியை பிரிட்டன் முடக்கியமை தொடர்பாக நேற்றுக் கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் அதிகரித்துள்ளன என்பதையும் இலங்கை அரசே இந்நடவடிக்கையில் நேரடியாக ஈடுபட்டு வருகின்றது (06ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் தரப்பு தனது நியாயத்தை விளக்குவதற்கு

# பிரிட்டிஷ் நாடாளுமன்றில் வாய்ப்புக் கிடைக்கும்

## புதனன்று அங்கு நடந்த விவாதத்தின் மூன்று விளைவுகளில் இதுவும் ஒன்று

லண்டன், மே 5


கிம் ஹவெல்ஸ்

**இலங்கைத் தமிழர்கள் தாம் நடத்தும் உரிமைப் போராட்டத்தின் நியாயத்தை, பிரிட்டிஷ் நாடாளு மன்றத்தில் (ஹவுஸ் ஒவ் கொமன்ஸ் சபையில்) எடுத்து விளக்குவதற்கு வாய்ப்புக் கிடைக்கும்.**

**இலங்கைத் தமிழர் பிரச்சினை - இனப்பிரச்சினை சம்பந்தமாக - கடந்த புதன்கிழமை - மே மாதம் இரண்டாம் திகதி நான்கரை மணி நேரம் இங்கு நடைபெற்ற விவாதத்தின் போது இது தொடர்பாகக் கோடி காட்டப்பட்டுள்ளது.**

அன்றைய விவாதத்தின் போது, அனைத்துக் கட்சி நாடாளுமன்றக் குழுவின் தலைவரும் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், தொழிற்கட்சி எம்.பியுமான கெய்த் வாஸ் தமது குழுவின் மூன்றம்சத் திட்டத்தை எடுத்து விளக்கினார்.

அவர் வெளியிட்ட மூன்றம்சத் திட்டம் வருமாறு:

★ இலங்கை அரசாங்கம் - தமிழீழ விடுதலைப் புலிகள் - நோர்வே அரசு ஆகிய முத்தரப்பினரும் கலந்துகொள்ளும் உச்சி மாநாட்டை எதிர்வரும் ஜூலை மாதத்தில் லண்டனில் நடத்துவது.

★ பிரிட்டனின் அனைத்துக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தூதுக்குழு ஒன்று எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் இலங்கைக்குச் சென்று பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் பேச்சு நடத்துவது.

விடுதலைப் புலிகளின் பிரதேசங்களுக்கும் சென்று பேச்சு நடத்துவது.

★ விடுதலைப் புலிகளின் பிரதம பேச்சாளர் (அனேகமாக அவர்களின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்) தமிழர் தரப்பு நியாயங்களை நாடாளுமன்றத்தில் எடுத்து விளக்க வாய்ப்பு வழங்குவது.

இம்மாதம் இரண்டாம் திகதி கொமன்ஸ் சபையில் நடைபெற்ற இலங்கைப் பிரச்சினை சம்பந்தமான விவாதத்தில் மொத்தம் அறுபது எம்.பிக்கள் கலந்து கொண்டு உரையாற்றினர்.

அங்கு பேசுகையில் கெய்த் வாஸ் குறிப்பிட்டதாவது:-

விடுதலைப் புலிகள் மீது பிரிட்டன் (06ஆம் பக்கம் பார்க்க)

## 35 தமிழர்கள் வெள்ளவத்தையில் நேற்றுக் கைது!

கொழும்பு, மே 5

கொழும்பில் வாழைத்தோட்டம், வெள்ளவத்தை ஆகிய பகுதிகளில் கடந்த இரு நாள்களாக மழைக்கு மத்தியிலும் தேடுதல் மேற்கொண்ட படையினர் 35 தமிழர்களைக் கைதுசெய்தனர்.

இவர்களில் ஐவர் கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஏனையோர் தொடர்ந்தும் பொலிஸ் நிலையங்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். (சி)

## புலிகளின் விமானங்கள் இந்தியாவுக்கு வரும் சாத்தியம் இருக்கின்றது

### எச்சரிக்கையாக இருக்கிறோம் என்கிறார் பிரணாப் முகர்ஜி

புதுடில்லி, மே 5

விடுதலைப் புலிகளின் விமானங்கள் இலங்கையில் இருந்தாலும் இந்தியப் பகுதிக்கு அவை பறந்து வரும் சாத்தியம் இருக்கின்றது. எனவே நாங்கள் எச்சரிக்கையாக இருக்கின்றோம்.

- இவ்வாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் நேற்று முன்தினம் கேள்வி நேரத்தின் போது பேசுகையில் அவர் மேற்கண்டவாறு சொன்னார்.

அப்போது அவர் மேலும் கூறியதாவது:-

விடுதலைப் புலிகளின் விமானப் படைப் பிரிவு இதுவரை இலங்கையில் 3 முறை வான் தாக்குதலை நடத்தியிருக்கிறது. இலங்கை இராணுவத்தால் அந்த விமானங்களைத் தடுக்கவோ, விரட்டவோ, வீழ்த்தவோ முடியவில்லை. இலங்கையில் இருந்தாலும் இந்த விமானங்கள் இந்தியப் பகுதிக்கும் பறந்துவரும் சாத்தியம் இருக்கிறது; எனவே இந்தியப் பகுதிகளில் காவலும் கண்காணிப்பும் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன.

1976இல் கையெழுத்தான ஒப்பந்தப்படி கச்சத் தீவு இலங்கைக்கு தரப்பட்டது. அதே சமயம் கச்சத்தீவில் இந்திய மீனவர்கள் சென்று (06ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கான உதவிகளை உலகநாடுகள் பிரிட்டனைப் பின்பற்றி முடக்க வேண்டும்!

### ஆசிய மனித உரிமைகள் மையம் வலியுறுத்து

புதுடில்லி, மே 5

திட்டமிட்ட வகையில் மனித உரிமைகளை மோசமாக மீறிவரும் இலங்கை அரசை சரியான வழிக்குக் கொண்டுவருவதற்காக, அந்நாட்டுக்கான உதவிகளை - பிரிட்டனைப் பின்பற்றி - உலக நாடுகள் அனைத்தும் முடக்கவேண்டும்.

புதுடில்லியை மையமாகக் கொண்டியங்கும் மனித உரிமைகளுக்கான ஆசிய மையம் இவ்வாறு கோரியிருக்கின்றது.

மனித உரிமைகளைப் பேணுவது தொடர்பான அடிப்படை நிலைமைகளை நிறைவு செய்யத் தவறியமைக்காக இலங்கைக்கான உதவிகளை முடக்குவதற்கு பிரிட்டன் முடிவு செய்திருக்கின்றது.

மனித உரிமைகளைப் பேணுவது தொடர்பான இலங்கை அரசின் செயற்பாட்டில் அதிருப்தியுற்று, அதனடிப்படையில் பிரிட்டன் எடுத்திருக்கும் இந்த முடிவை மனித உரிமைகளுக்கான ஆசிய மையம் வரவேற்றிருக்கின்றது.

விசேட குற்றத்தவிர்ப்புச் சட்ட வசதியைப் பயன்படுத்தி மனிதாபிமானத் தொண்டர்களை படுகொலை செய்துவிட்டு சட்டத்தின்முன் பதில் சொல்லாமல் தப்பியும் -

(06ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போன மீனவர்களை விடுவிக்க தூதரகம் மூலம் நடவடிக்கை எடுக்கவேண்டும்

### பிரதமரிடம் கோரியுள்ளதாக கருணாநிதி தகவல்

சென்னை, மே 5

காணாமற்போன கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 12 மீனவர்களையும் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் ஊடாக விடுவிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இந்தியப் பிரதமரிடம் கேட்டுள்ளேன்.

தமிழக முதல்வர் மு. கருணாநிதி நேற்று சட்டப் பேரவையில் இத்தகவலை வெளியிட்டார்.

மீனவர் கொலை மற்றும் காணாமற்போனமை தொடர்பாக சட்டப் பேரவையில் நேற்று நடந்த விவாதத்துக்கு பதில் அளித்துப் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடத்தப்பட்ட மீனவர்கள் தொடர்பாகக் கிடைத்த அனைத்துத் தகவல்களையும் இந்தியப் பிரதமருக்கு அறிவித்துள்ளோம்.

தமிழகத்துக்கு அவப்பெயர் ஏற்பட்டுவிடக் கூடாது என்ற காரணத்தினாலேயே மார்ச் 29ஆம் திகதி கன்னியாகுமரி மாவட்ட மீனவர்கள் கொலை செய்யப்பட்டமைக்கு விடுதலைப் புலிகள்தான் காரணம் எனப் பகிரங்கப் படுத்தினேன் - என்று தெரிவித்தார்.

அதவேளை -

விடுதலைப் புலிகளால் கைது செய்யப் (06ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## 31ஆம் நாள் நினைவாக

'சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்திலும் மறவாதீர்கள்'



அமரர்
### ஞானப்பிரகாசம் விக்ரோறியப்பர்

தோற்றம் 23.03.1949 — மறைவு 06.04.2007

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
தொட்டமகன் குடும்பம்.
*10ஆம் வட்டாரம், நெடுந்தீவு.* (60325)

## ஈரவிழிகளுடன் 45ஆம் நாள் நினைவஞ்சலி



செல்வி
### கதிரன் உதயயோகிதா(யோகி)

*ஆடைகட்டி அலங்கரிக்கும் பருவ வயதில்*
*உனக்கு பாடை கட்டும் பரிதாப நிலையா*
*எமக்கு*
*காலங்கள் பல சென்றாலும்*
*கண்ணே உனை நாம் மறவோம்.*

அன்னாரின் இல்லத்தில் இன்று (05.05.2007) சனிக்கிழமை நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி தெற்கு.* (60331) - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### வேலுப்பிள்ளை துரைச்சாமி



(இளைப்பாறிய ஆசிரியர், மட்டுவில்)

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை துரைச்சாமி (இளைப்பாறிய ஆசிரியர்) 03.05.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும், காலஞ்சென்ற இராசமணியின் (ஆசிரியை) அன்புக் கணவரும் சிறிதரன் (பிரான்ஸ்), யசோதா (கனடா), யசோதரன் (பிரான்ஸ்), பிறேமலதா (பிரான்ஸ்), ஹரிகரன் (கனடா), மனோகரன் (கனடா), முரளிதரன் (கனடா), ரவிதரன் (பிரான்ஸ்), உமாகௌரி (ஆசிரியை - வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் மகேஸ்வரி (பிரான்ஸ்), பாக்கியநாதன் (கனடா), சகுந்தலா (பிரான்ஸ்), கமலநாதன் (பிரான்ஸ்), ஜெயமலர் (கனடா), வசந்தி (கனடா), ரோகினி (கனடா), கலா (பிரான்ஸ்), பாலேந்திரா (முகாரி, கட்டடப்பகுதி, புகையிரதத் திணைக்களம் - வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (04.05.2007) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*''நிருஷாந்தம்''*
*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.* (60345)

தகவல்:
வே. சின்னராசா
(சகோதரன்).

### திருமதி கந்தையா இலட்சுமி



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இலட்சுமி நேற்று (04.05.2007) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வேதநாயகம், கனகாம்பிகை (இளைப்பாறிய ஆசிரியை, மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்) யோகாம்பிகை, திலகவதி (கனடா), சுலோசனா, சுவர்ணா ஆகியோரின் பாசமிகு தாயும் சற்குணசிங்கம், சிவசம்பு, ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, வன்னியசிங்கம், நல்லையா (அமரர்), தில்லைநாயகி ஆகியோரின் அன்பு மாமியும் சுகந்தி, பகீரதன் (கனடா), பாஸ்கரன் (கனடா), பிரபாகரன் (கனடா), லோஜிதன், கௌசிகா, கோபிகா, சங்கவி, ரூபகானன் ஆகியோரின் பேர்த்தியும் சுபானுஜா, லதீசன், லதீசனா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மீசாலை கிழக்கு அல்லாரை வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொற்புலவு இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(அ-52352)

தகவல்:
க.வேதநாயகம்
(மகன்)

### திருமதி சுப்பிரமணியம் செல்லம்மா

மீசாலை மேற்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் செல்லம்மா 03.05.2007 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் மகேஸ்வரி, காலஞ்சென்ற வல்லிபுரம், பரமேஸ்வரி, பொன்னம்மா (ஆசிரியை, சாவ. இந்து கல்லூரி), பரமசாமி, இரத்தினபூபதி (ஆசிரியை, மீசாலை வீரசிங்கம் ம.வி.) ஆகியோரின் அன்புத் தாயும் கந்தசாமி (இளைப்பாறிய நெசவு ஆசிரியர்), கமலாதேவி, காலஞ்சென்ற வயிரமுத்து (V.P.N. மில் உரிமையாளர்), பெஞ்சமின் இராஜரட்ணம் (முன்னாள் பத்திரிகை ஆசிரியர்), கமலேஸ்வரி, நாகேந்திரன் ( C.T.B. திடீர் பரிசோதகர் - யாழ்.) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று 04.05.2007 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மீசாலை மேற்கு.*
*மீசாலை.* (அ-52353)

தகவல்:
குடும்பத்தினர்.

## கோதுமை மாவின் விலை உயர்ந்தது

யாழ்ப்பாணம், மே 5

கோதுமை மாவின் விலை 3 ரூபா 50 சதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கோதுமை மாவின் விலை ஏற்கனவே பல தடவைகள் அரசாங்கத்தினால் உயர்த்தப்பட்டு, தற்போது கொழும்பில் ஒரு கிலோ 42 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. ஆனால் குடாநாட்டில் பல நோக்குக்கூட்டுறவுச் சங்கங்களில் 48 ரூபாவுக்கும் தனியார் கடைகளில் 50 ரூபா முதல் 52 ரூபா வரையும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

கோதுமை மாவின் விலை நேற்றுத் தொடக்கம் 3 ரூபா 50 சதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் மாவின் விலை 3 ரூபா 50 சதம் மட்டும் உயர்த்தப்படுமா அல்லது ஏனைய பொருள்களுக்கு விலையேற்றப்படுவது போன்று , முக்கிய அத்தியாவசிய உணவுப் பொருள்களில் ஒன்றாகிவிட்ட கோதுமை மா என்ன விலைக்கு விற்கப்படுமோ என்று குடாநாட்டு மக்கள் அங்கலாய்க்கின்றனர். (அ-68)

## வடமராட்சியில் பதநீர் உற்பத்தி ஆரம்பம்

உடுப்பிட்டி.மே.5

வடமராட்சியில் பதநீர் (கருப்பநீர்) போத்தல் ஒன்று 50 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது.

வெய்யில் காலமான சித்திரைமுதல் ஆடிவரை கருப்பநீர் உற்பத்தி செய்யப்படுவது வழக்கம்.

தற்போது அந்தப் பருவகாலம் (சீசன்) தொடங்கியுள்ளது. எனினும் போத்தல் ஒன்று 50 ரூபாவாக விற்கப்படுவது முன்னர் எப்போதும் இல்லாதவாறு அதிகமானது என்றுமக்கள் தெரிவிக்கின்றனர். (அ-155)

## சூறாவளியால் காவலரண்கள் சேதம்

யாழ்ப்பாணம்.மே.5

தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு வீசிய மினிசூறாவளி படையினர் மற்றும் பொலிஸார் ஆகியோருக்கும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளது.

சாவகச்சேரி பொலிஸ்நிலையப் பதுங்குகுழி மீது வேப்பமரக்கிளை முறிந்து விழுந்ததில் பதுங்குகுழியும் அருகில்இருந்த காவலரணும் சேதமடைந்தன.

படையினரின் பல காவலரண்களின் கூரைகள் தூக்கி வீசப்பட்டுள்ளன. (1-207)

## ஈஸ்வரம்மா தின நிகழ்வுகள் நாளை

யாழ்ப்பாணம், மே 5

யாழ். மத்தி சத்தியசாயிபாபா சேவா நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலுக்குச் சமீப மாக அமைந்துள்ள நிலையத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஈஸ்வரம்மா தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

நினைவு தின உரை, பலவிகார் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் பஜனை, பரிசளிப்பு ஆகியன இடம்பெறவுள்ளன. (1)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், மே 5

இணுவில் பரராஜ சேகரப்பிள்ளையார் ஆலய பஞ்சமுக விநாயகர் வாசல் பஞ்சதள இராஜகோபுர மகாகும்பாபிசேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது. தொடர்ந்து கோபுர தரிசனம், மகா அபிசேகம், அன்னதானம் என்பன இடம்பெறவுள்ளன. (203)

★ ★ ★

வலி. தென்மேற்கு, மே 5

பண்டத்தரிப்பு புனித அன்னை பத்திமா மாதா ஆலய வருடாந்த உற்சவம் நேற்று வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று எதிர்வரும் 12ஆம் திகதி நற்கருணைத் திருவிழா நடைபெறும். மறுநாள் காலை திருப்பலி பூசை, திருச்சொரூப பவனி என்பன இடம்பெறும். (203-135)

**A/L 2009 & 08**
* A/L கலை,வர்த்தக, கணித, விஞ்ஞான வகுப்புகள் ஆங்கிலம், G.I.T. & சித்திரம்
B.st. - Mr.பசில்
Acc. - Mr.தவா
Econ. - Mr.கஜிதரன்
* Gr.1முதல் O/L வரை
* Eng. Med. 6 to 10.
* புலமைப் பரிசில் Gr.5 (மாதிப்பரீட்சைகளுடன்)
**SHAMROCK**
ஈச்சமோட்டை, யாழ்.

### மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

அரச அதிகாரியாக கடமையாற்றுபவரது Hero Honda CD Deluxe இன மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு 222 9278 அல்லது 0779871993.

### வீடு வாடகைக்கு

மாட்டின் வீதியில் அமைந்துள்ள சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு. தொடர்பு: 53, மாட்டின் வீதி (வேள்ட் விசன் அருகாமை), யாழ்ப்பாணம். பார்வையிடும் நேரம் 9 - 4 மணிவரை (06.05.2007) ஞாயிற்றுக்கிழமை.

## கொக்குவில் இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழா

காலம் - இன்று (05.05.2007) சனிக்கிழமை மு.ப. 10 மணி.
இடம் - பஞ்சலிங்கம் கேட்போர் கூடம்.
தலைவர் - பொ.கமலநாதன் - அதிபர்
*முதன்மை விருந்தினர்* - ஈஸ்வரநாதபிள்ளை குமரன் (விரிவுரையாளர், தமிழ்த்துறை,யாழ். பல்கலைக்கழகம்)
*சிறப்பு விருந்தினர்* - கே.வி.குணசேகரம் (கோட்டக் கல்விப் பணிப்பாளர், நல்லூர்)
*பரிசில் வழங்கல்* - திருமதி சுபாசினி குமரன்

தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

கொக்குவில். (அ-52347)
அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர், பழைய மாணவர்.

## இணுவில்
### அருள்மிகு ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோயில் பஞ்சமுக விநாயகர் சந்நிதான பஞ்சதள இராஜகோபுர மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்

விநாயகர் அடியார்களே!

நிகழும் மங்களகரமான சர்வசித்து வருஷம் சித்திரை மாதம் 21ஆம் நாள் (04.05.2007) வெள்ளிக்கிழமை அதிகாலை 5.45 மணிக்கு ஆரம்பமாகியது.

சித்திரை 23ஆம் நாள் நாளை (06.05.2007) ஞாயிற்றுக்கிழமை காலை 6.15 மணிக்கு ஸ்தூபிஸ்தானம்

முற்பகல் 11 மணிக்கு

**மகா கும்பாபிஷேகம், கோபுர தரிசனம்**

தொடர்ந்து மகா அபிஷேகம் நடைபெற்று அன்னதானம் நடைபெறும்.

*அடியார்கள் யாவரும் வருகைதந்து எம்பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்றுய்வீர்களாக.*

இணுவில். (60335) - விழா உபயகாரர்கள்

## தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
### வெற்றிடமான பதவிகளுக்கு விண்ணப்பம் கோரல்

சங்கத்தின் நிரந்தர ஆளணி நியமனத்திற்கான கீழ்காணும் பதவிகளுக்கான வெற்றிடம் எமது சங்கப் பணியாளர்களிடமிருந்தும் வெளி வாரியாகவும் கோரப்படுகின்றன. சங்கத்தால் வழங்கப்படும் விண்ணப்பப்பத்திரத்திலேயே விண்ணப்பங்கள் நிரப்பப்பட்டு *'பொதுமுகாமையாளர், தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், தெல்லிப்பழை'* என்ற முகவரிக்கு 2007.05.15ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மூலையில்..... குறித்த பதவிகளுக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிடல் வேண்டும்.

கல்விச் சான்றிதழ், நற்சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடத் தகைமையை பிறப்புச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்படாவிடின் அந்த விளக்கம் குறித்த அத்தாட்சிப்படுத்தும் கடிதமும் அனுப்பப்படவேண்டும். (இச்சான்றிதழ்களின் மூலம் பிரதிகள் கோரப்படுமிடத்து நேர்முகப்பரீட்சைக்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.) வயதெல்லை 18-40 இடைப் பட்டவராக இருத்தல் வேண்டும். சங்கப் பணியாளர்களு[illegible] வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது.

1) விற்பனையாளர் 308/17
சம்பளத்திட்டம் 8950 - 10300 / 65x10 - 70x10

தகைமைகள்
அ) கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட தராதரம்
அல்லது
ஆ) எட்டாம் வகுப்பிலான சித்தியும், விற்பனைத் தொழிலில் 03 வருடத்திற்குக் குறையாத அனுபவமும்.

2) அலுவலக உதவியாளர் 317/16
சம்பளத்திட்டம் 9200 - 10650 / 70x10 - 75x10

தகைமைகள்
அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியொன்றில் ஒரு வருடத்திற்குக் குறையாத அனுபவமும், 05ஆம் வகுப்புக் கல்விச் சான்றிதழும்.
அல்லது
ஆ) எட்டாம் வகுப்புச் சான்றிதழ்.

*துர்க்காபுரம்,*
*தெல்லிப்பழை.* (அ-52346)
பொதுமுகாமையாளர்
தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லத்துரை பத்மாவதி

இணுவிலைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை பத்மாவதி நேற்றுக் காலமானார்.

அன்னார் கார்த்திகேசு செல்லத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கனகசபை மற்றும் பரிமளம் தம்பதியரின் மகளும் கார்த்திகேசு தம்பதிகளின் மருமகளும் சண்முகஸ்வரன் (பிரான்ஸ்), தயந்தினி (சுவிஸ்), விமலேஸ்வரன் ஆகியோரின் தாயும் பத்மநாதன் (ஜேர்மனி), தனவதி (சுவிஸ்), பத்மநிதி (பிரான்ஸ்), ஸ்ரீமதி லக்சுமி ஆகியோரின் சகோதரியும் ஜெயக்குமார், அன்னபூரணம், குலசிங்கம், அம்பலவாணர், காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் இன்று (05.05.2007) பிற்பகல் 2 மணியளவில் மட்டுவில் சின்னத்தூமயானத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மட்டுவில் தெற்கு,*
*சாவகச்சேரி.*

தகவல்:
க. செல்லத்துரை (கணவர்),
விமலேஸ்வரன் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச ஆதரவை இலங்கை இழப்பது புலிகளுக்கே வாய்ப்பு என்கிறார் ரணில்

## ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதியிடம் அவர் நேரில் தெரிவிப்பு

கொழும்பு,மே 5

இலங்கை அரசிற்கும் சர்வதேச சமூகத்திற்குமிடையில் நெருக்கமான உறவு நிலவாத பட்சத்தில் அதனைப் புலிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தக்கூடும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுகள் மற்றும் ஐரோப்பிய அயல் நாட்டுக் கொள்கைகள் பிரிவுக்குப் பொறுப்பான பெனிடோ பெரீரோ வோல்ட்னருக்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க கடந்த புதன்கிழமை பிரேஸிலில் வோல்ட்னரை சந்தித்துக் கலந்துரையாடினார். அதன்போதே அவர் இக் கருத்தை வெளியிட்டார்.

இலங்கையில் இடம்பெற்றுவரும் யுத்தம் மனித உரிமை மீறல்கள் மற்றும் ஊடகங்கள் மீதான அடக்குமுறை என்பவை குறித்து விளக்கியதுடன் இலங்கையில் சமாதானத்தை உருவாக்குவதற்கும் நாட்டின் ஐக்கியத்தைப் பாதுகாப்பதற்கும் சர்வதேச சமூகம் முழுமையான அளவில் இலங்கைக்கு உதவவேண்டும் என்றும் ரணில் பெனிடோவிடம் கேட்டுக்கொண்டார்.

இலங்கை அரசு - சர்வதேச சமூக உறவு நெருக்கமாக இல்லாவிட்டால் புலிகள் அதைத் தமக்கும் சாதகமாகப் பயன்படுத்தக் கூடும். இலங்கை அதிகாரிகள் இதனை உணர்ந்து ஐரோப்பிய ஒன்றியத்தினதும் இணைத் தலைமை நாடுகளினதும் முழு ஆதரவையும் மீளப் பெறுவதற்கேற்ப செயற்பட வேண்டும் என்றும் ரணில் தெரிவித்தார்.

ஐ.தே.கட்சியால் வெளியிடப்பட்டுள்ள 'இலங்கை - பகலில் இருள்' என்ற தலைப்பிலான அறிக்கையின் பிரதி ஒன்றையும் ரணில் பெனிடோவிடம் கையளித்தார். (சி)

# தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, மே5

மொறட்டுவப் பல்கலைக்கழகத்தின் தொழில் நுட்பநிறுவனம், தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா கற்கைநெறிக்கு விண் ணப்பங்களைக் கோரியுள்ளது.

இந்தக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் இணைந்த கணிதம், உயர் கணிதம், பௌதிகவில் மற்றும் இரசாயனவியல் ஆகிய பாடங்களில் குறைந்தது 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். 2004 அல்லது 2005 அல்லது 2006ஆம் ஆண்டுளில் இடம்பெற்ற ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சைகளில் ஏதேனும் ஓர் ஆண்டில் ஓரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று விண்ணப்பதாரிகள் 24 வயதிற்கு குறைந்தவர்களாகவும் இருத்தல் வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

இக்கற்கை நெறிக்கான விண்ணப்பப் படிவங்களையும், தகவல்களையும் நேரடியாக தொழில்நுட்பவியல் நிறுவனம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம், மொறட்டுவ. என்ற முகவரியில் பெற்றுக்கொள்ளலாம். அல்லது கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் **"Application form to NDT Course 2007/2008"** என்று எழுதி அதனுள் 9x4 கடித உறையில், முகரியை எழுதி (30 ரூபா முத்திரை ஒட்டவும்) உதவிப் பதிவாளர், தொழில்நுட்பவியல் நிறுவனம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம், கட்டுப்பெத்த, மொறட்டுவை என்ற முகவரிக்கு அனுப்பியும் விண்ணப்படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

குறித்த கற்கை நெறி தொடர்பான மேலதி விவரங்களை 12.04.2007ஆம் திகதி 1493 ஆம் இலக்க அரச வர்த்தக மானியில் பார்வையிடமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கற்கை நெறிக்கான விண்ணப்ப முடிவுத் திகதி ஜூன் மாதம் 8ஆம் திகதி ஆகும். (சி)

## கல்வி செயற்பாட்டு வார பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றோர்

யாழ்ப்பாணம்,மே 5

கல்வி அபிவிருத்திக்கான கூட்டமைப்பின் ஆதரவில் உலகளாவிய கல்வி செயற்பாட்டு வாரத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய மண்டபத்தில் கடந்த 24ஆம் திகதி நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரி மாணவர்கள் முதல் மூன்று இடங்களையும் பெற்றுள்ளனர்.

அவர்களின் விவரம் வருமாறு:-

க.உஷாந்தன், பி.நந்திகரன், தி.அச்சுதன். (203)

# கைதடி கிழக்கில் 'நியாப்' திட்ட வீதிகள் புனரமைப்பு ஸ்தம்பிதம்

கைதடி,மே 5

கைதடி கிழக்கில் 'நியாப்' திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவந்த வீதித் திருத்த வேலைகள் நிறைவு பெறாமல் ஸ்தம்பித்துள்ளன.

வீதிப் புனரமைப்பிற்கென கடந்த 2 மாதங்களின் முன்னர் சில வீதிகளின் நடுவே மக்கிமண் போடப்பட்டது. ஆயினும் இன்று வரை புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.

வீதிப் புனரமைப்பு இடம்பெறாமையாலும் வீதியின் நடுவில் மக்கிமண் போடப்பட்டிருப்பதாலும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

கைதடி கலைநகர் வீதி, வானத்தலட்டி வீதி, பச்சைப் புலவு வீதி ஆகியவையே திருத்தப்படாது உள்ளன.

எனவே சம்பந்தப்பட்டவர்கள் இந்த விடயத்தைக் கவனத்திலெடுத்து வீதித் திருத்த வேலைகளை உடன் நிறைவேற்றித் தருமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(202-75)

## மின்தடை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம்,மே 5

இலங்கை மின்சார சபையின் யாழ்.பிரதேச அலுவலகம் அவசர திருத்த வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை குறிப்பிட்ட இடங்களில் மின் தடையை ஏற்படுத்தவுள்ளதாக அறிவித்துள்ளது.

இணுவில், உடுவில், மருதனார்மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார்கோயிலடி, யாழ்ப்பாணப் பட்டினம் (யாழ்.போதனா வைத்தியசாலை, பஸ்தரிப்பிடம் தவிர்ந்த) ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், பொற்பதி, சங்குவேலி ஆகிய பிரதேசங்களிலேயே மின் தடை ஏற்படுத்தப்படவுள்ளது. (203)

# மனித உரிமை மீறல்கள் குறித்து சட்டத்தரணிகளின் சங்கம் கண்டிக்காமல் மௌனம் சாதிப்பது ஏன்?

## உறுப்பினர்கள் குழுவொன்று போர்க்கொடி

கொழும்பு,மே 5

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் (**Bar Association**) இலங்கையில் இடம்பெற்று வரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எதுவித எதிர்க் குரலும் வெளிப்படுத்தாமல் இருந்து வருவது தொடர்பாக அச் சங்கத்தைச் சேர்ந்த சில சட்டத்தரணிகள் கவலை தெரிவித்துள்ளார்கள்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்க நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் கண்டி வலய உதவித் தலைவருமான ஒரு சட்டத்தரணி ...ந்து வெளியிடுகையில் நாட்டில் பரவலாக நடைபெற்றுவரும் ஆள்கள் காணாமல் போதல், ஆள் கடத்தல்கள், நீதிக்குப் புறம்பான கொலைகள் தொடர்பாக ஆழ்ந்த கவலை தெரிவிக்கும் அறிக்கையொன்றை சங்கம் வெளியிடவேண்டும் என்று ஒருமனதாகத் தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டது. இரண்டு மாதங்கள் ஆகியும் சங்கம் இது பற்றி எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வருகின்றது என்று கூறினார்.

மேற்படி தீர்மானத்தை முன்மொழிந்தவரான சட்டத்தரணி லால் விஜயநாயக்க கூறுகையில், இது மிகவும் துரதிஷ்டமானதொரு நிலைமை. நாட்டில் சட்ட நடைமுறைக்கும் ஜனநா்யக அமைப்பு மற்றும் மனித உரிமைகளுக்கு சவால் விடும் வகையில் நிலைமைகள் அதிகரித்துவருவது குறித்து கவலை தெரிவிப்பதுடன் இந்தப் போக்கினைத் தடுத்து நிறுத்தும்படி அதிகாரிகளைக் கேட்டுக்கொள்ளும் அறிக்கையொன்றினை விடுப்பதற்கான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டவர்கள் இன்னமும் வாளாவிருந்துவருகிறார்கள் என்று கூறினார்.

சட்டத்தரணிகள் சங்கம் அதன் உறுப்பினர்களின் தொழில்ரீதியான உரிமைகளைப் பேணுவதில் மட்டும் அக்கறை செலுத்தாமல் நாட்டில் சட்ட நடைமுறை நிலைநாட்டப்படுவதிலும் மக்களின் ஜனநாயக உரிமைகளை நிலை நாட்டுவதிலும் அக்கறை கொள்ள வேண்டும். மக்கள் தொடர்பான கடமைகளை நிறைவேற்றும் அர்ப்பணிப்பும் துணிச்சலும் இவர்களுக்கில்லாமல் போயுள்ளது என்று சட்டத்தரணிகள் குழுவொன்று தெரிவித்துள்ளது.

சகல சட்டத் தரணிகளுக்காகவும் செயற்பட்டுவரும் இச் சங்கம் தமது கோரிக்கைகளுக்கு இணங்காவிடில் வேறு ஒரு சுயேச்சையான அமைப்பினை தாங்கள் நாடவேண்டியிருக்கும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

ஒரு தொழில் சார் அமைப்பு என்ற முறையில் மனித உரிமை மீறல்களுக்கு எதிராக முனைப்புடன் நிற்கவேண்டியது சங்கத்தின் கடமையாகும். சமீபகாலத்தில் 40 பேர் வரை பொலிஸாரால் கொல்லப்பட்டுள்ளார்கள். இவர்கள் அனைவரும் பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகின்றது. பாதாள உலகைச் சேர்ந்தவர்களாய் இருந்தாலும் நீதி நடைமுறைகளின் படி அவர்கள் நடத்தப்படவேண்டும். பொலிஸார் சட்டத்தை கையில் எடுத்தக் கொள்வதானது பாரதூரமான செயற்பாடாகும் என்று அக்குழுவினர் தெரிவித்தனர்.

அரசுக்கெதிராக கருத்து வெளியிடுபவர்கள் மற்றும் ஊடகங்கள், ஊடகத் துறையினர் மீதான அண்மைக்கால தாக்குதல் களையும் அவர்கள் கண்டித்தனர். (ப)

## கிறிஸ்தவ கருத்தமர்வு

யாழ்ப்பாணம்,மே 5

தென்னிந்திய திருச்சபையின் யாழ்.ஆதீன சமயக் கல்விக்குழு நடத்திவரும் கிறிஸ்தவ தொடர் கருத்தமர்வில் இன்று காலை 9 மணிக்கு யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் உள்ள யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவில் 'பவுலடிகளாரின் திருமுகங்கள் அப்போஸ்தலர் பண்' என்ற தலைப்பில் கருத்துரை வழங்கப்படவுள்ளது.

இதில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆசிரியை திருமதி அனிதா லெனின்சியா கருத்துரை வழங்கவுள்ளார். (203)

## யாழ்.மாநகரசபை ச.ச.நிலையங்களுக்கு நன்கொடை உதவி

நல்லூர்,மே 5

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்கு உட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு 2006 ஆம் ஆண்டுக்கான நன்கொடைப் பணம் வழங்கப்பட்டு வருகின்றது.

தமது நிலையத்திற்குரிய நன்கொடைப் பணத்தைப் பெற்றுக்கொள்ளாத சனசமூக நிலையங்கள் விரைவில் அதனைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(202-111)

# பிரதேச சபைகளை நகரசபைகளாக்கும் திட்டம் மூன்று வருடங்கள் கடந்தும் அமுலில் இல்லை

யாழ்ப்பாணம்,மே 5

யாழ்.மாவட்டத்தில் உள்ள மூன்று பிரதேச சபைகளை நகர சபைகளாகத் தரம் உயர்த்துவதற்கு மூன்று வருடங்களுக்கு முன்னர் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டன. ஆயினும் இதுவரை தரமுயர்த்துவதற்கான எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

நல்லூர், புத்தூர், மானிப்பாய் ஆகிய பிரதேச சபைகளை நகர சபைகளாகத் தரமுயர்த்துவதற்கு மாகாண உள்ளுராட்சி ஆணையாளரால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கென வருமான எல்லைகள், வரைபடங்கள் போன்ற முக்கிய ஆவணங்கள் பிரதேச சபைச் செயலாளர்களால் அனுப்பி வைக்கப்பட்டன. மூன்று வருடங்கள் கடந்த நிலையிலும் தரமுயர்த்தும் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

இதேவைளை - கடந்த வருடம் இடம்பெற்ற மாவட்ட மட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் குடாநாட்டில் 5 பிரதேச சபைகள் உடனடியாக நகர சபைகளாகத் தரமுயர்த்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.அதற்கான ஏற்பாடுகள் தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

இந்நிலையில் - கிராம சபைகளை உருவாக்குவதற்கு அரச மட்டத்தில் ஆலோசிக்கப்படுவதால் நகர சபைத்திட்டம் மாகாண அரசால் கைவிடப்படலாம் என அறியப்படுகின்றது. (202-95)

## சந்திப்பு

யாழ்ப்பாணம்,மே 5

தேசிய கல்வி நிறுவனத்தின் யாழ்.பிராந்திய நிலையத்தில் கல்வி டிப்ளோமா, கல்வி மாணி பாடநெறிகளில் விரிவுரையாளர்களாக, வள ஆளணியினராகக் கடமையாற்றுபவர்களை நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி நிலையத்துக்கு வருகை தருமாறு யாழ்.பிராந்திய மத்திய நிலைய இணைப்பாளர் திருமதி த.வில்வநாதன் கேட்டுள்ளார். (202)

## திணைக்களங்களுக்கிடையே பெருவிளையாட்டுகள்

யாழ்.தபால் திணைக்களத்தால் அரச திணைக்களகங்கள் மற்றும் வங்கிகளுக்கிடையில் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

கரபந்து, உதைபந்து, மென்பந்து கிரிக்கெட் ஆகிய போட்டிகளே நடத்தப்பட்டு வருகின்றன.

முறையே தேசிய சேமிப்பு வங்கி, மக்கள் வங்கி, இலங்கைவங்கி ஆகியவற்றின் அனுசரணையுடன் இப்போட்டிகள் நடத்தப்பட்டுவருகின்றன. (203)

எழுத்தாளர் யோசப் பாலாவின் 'உளமார...' நூலின் வெளியீட்டு விழா அண்மையில் யாழ்.திருமறைக் கலாமன்ற அழகியல் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக சமூகவியல்துறைத் தலைவர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் நூலை வெளியிட்டு வைக்க திருமதி புவனா இராஜகோபால் (செம்பியன் செல்வன்) முதல் பிரதியைப் பெறுவதை படத்தில் காணலாம். அருகில் நூலாசிரியரும் காணப்படுகிறார்.




## உறுதி பூசுதல் நிகழ்வு

வலி.தென்மேற்கு, மே 5

சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்தில் உறுதி பூசுதல் நிகழ்வு இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ளது. யாழ்.மறை மாவட்ட ஆயர் அதிவண. கலாநிதி தோமஸ் சவுந்தர நாயகம் ஆண்டகை இதில் கலந்துகொண்டு உறுதி பூசுதல் சடங்கை நடத்துவார்.

(202-135)

## கலைகலாசாரப் பேரவை செயற்குழுக் கூட்டம் இன்று

யாழ்ப்பாணம், மே 5

மாவட்ட கலை கலாசாரப் பேரவையின் செயற்குழுக் கூட்டம் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் உறுப்பினர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கேட்டுள்ளார். (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எமது அன்பிற்குரிய கிராம அலுவலரை பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கிராமத்தின் ஒளிவிளக்காகத் திகழ்ந்த

**சுப்பிரமணியம் செல்வராசா**

(கிராம அலுவலர் - தரம் 1)

அவர்கள் 25.04.2007 ஓய்வுபெற்றதை நினைந்து மிகுந்த வேதனை அடைகின்றோம். அவர் எமது கிராமத்தில் நன்மை, தீமை நிகழ்வுகளில் முன்னின்று செயலாற்றிய பெருந்தகை ஆவார். கிராமத்தினதும் மக்களினதும் உயர்ச்சிக்காக அரும்பணியாற்றிய பண்பாளன். தமது கடமை நேரம் பாராது மக்களிற்கு சேவையாற்றியவர். இறைவனது தலங்களில் பஜனைகள் பாடிவரும் அன்பர். இவர் நீண்ட ஆயுளும் நிறைவான செல்வமும் பெற்று வாழ எல்லாம் வல்ல இணுங்கித்தோட்ட முருகனை பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்:
கா.ஆறுமுகம் - தையல்நாயகி குடும்பம்,
சீ.பாலசிங்கம் - சிவாஜினி குடும்பம்
கைதடி மேற்கு.

(60314)

---

வடமராட்சி மாணவர்களுக்கு!!

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

**11.05.2007 10. a.m.**

- Diploma in Microsoft office
- Diploma in Computer Programming
- Diploma in Destop Publishing
- Diploma in Internet Technology
- Diploma in Hardware Technology


பதிவுகள் அனைத்தையும் 10.05.2007 இற்கு முன் மேற்கொள்ளவும்.

**Institute of Informatics Studies**
Nelliyady, Karaveddy.
T.P.: 021 226 3335

(60315)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் இரா.சுந்தரலிங்கம்

திதி: பங்குனி அபரபக்கம் திருதியை(05.05.2007)

தோற்றம் 15.05.1932 மறைவு 05-04-2007

எமக்கரும் தந்தையாய் மாமனாய் பேரராய் நல்லுறவாய்
தமக்கெனவே வாழாத தருமம், கல்வி யருள் செல்வம்
அவரவர்க் கேற்றாற்போல் இயைய வழியமைத்தமையால்
எவரெவர்க்கும் இணையில்லான் இறையடியைச் சேர்ந்தனையே.

- குடும்பத்தினர்.
89/14, பசல்ஸ் லேன்,
வெள்ளவத்தை.
011 - 2586226
'செல்வானந்த வாசா'
இணுவில்மேற்கு, இணுவில்.

(அ/52331)

---

## 7ஆம் ஆண்டு நினைவில்....

தோற்றம் 16 - 05 - 1950



மறைவு 21 - 04 - 2000

## திருமதி சண்முகமலர் தர்மராஜா

(புனிதம், இணுவில் மேற்கு)

திதி: 05.05.2007

அம்மா!
காலங்களே தந்த சொத்து!
காலங்களே பறித்த சொத்து!
காலங்களே எம்மைக் குதூகலிக்கவும் வைத்தன!
காலங்களே எம்மை கலங்கவும் வைத்தன அம்மா!

வே.தர்மராஜா,
கற்பகப்பிள்ளையார் கோயிலடி,
இணுவில் மேற்கு, சுன்னாகம்.

என்றும் உங்கள்
நினைவுகளுடன்
கணவர், பிள்ளைகள்

(60312)

---

### கார் விற்பனைக்கு

தனிப்பாவனையில் நல்ல நிலையிலுள்ள AC பொருத்திய அழகான பச்சை நிற Lancer கார் விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு:
0775029205

---

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட் கோழி இறைச்சி விற்பனைக்கு உண்டு.
**NEW R.S.K. Farm**
மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.

---

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்

விஜய், அசின், வடிவேல் நடித்த

**போக்கிரி** (நீலஸ்)



தினசரி : 10.45, 2.45மணி.

---

### இறைச்சிக் கோழி விற்பனை

புறொயிலர் இறைச்சி (ICE) வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.

---

### விற்பனைக்கு

**மின்மினி அழகுமாடம்**
அச்சுவேலி (அச்சுவேலி ம.வி.முன்பாக)

மேற்படி வியாபார நிலையம் பான்சி பொருள்கள், பாடசாலை உபகரணங்கள், அன்பளிப்புப் பொருள்கள், தளபாடங்களுடன் விசேட விலைக் கழிவில் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
உரிமையாளர்,
**மின்மினி அழகுமாடம்,**
அச்சுவேலி.

(60320)

---

## கண்ணீர் அஞ்சலி



26.04.2007 இல் கொழும்பில் திடீர் மரணமடைந்த எமது முன்னாள் செயலாளரும் எமது பங்கு வளர்ச்சியில் தீவிரமாக உழைத்தவருமான

**அமரர் அந்திரேஸ்பிள்ளை யோசவ் இம்மானுவேல் (தாத்தா)**

அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சில்லாலை புனித கதிரைமாதா ஆலய அருட்பணிச் சபையும் பங்குத் தந்தையும்**

(60336)

---

புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!

**COMPUTER EXPRESS**
ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office
No 15,
Brombiyadi Lane
(off Stanly Rd.)
021-222 8250,
0777 222422

Branch office
No 167,
Kasthuriyar Rd,
(Near Uthayan Publication)
Jaffna.

**Diploma in Hardware Engineering**
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc.
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 07/05/2007- 09.00

அனைத்துக் கற்கைநெறிகளிற்கான புதிய பிரிவுகள் 04/05/2007, 05/05/2007 06/05/2007, 09/05/2007ம் திகதிகளில் ஆரம்பமாகின்றது

3 மாதகால
**Diploma in Computerized Accounting**
புதிய பிரிவுகள் ஆரம்பம்
05/05/2007 06/05/2007 07/05/2007

---

காமாட்சி துணை
ஓம் விராட் விஸ்வ பிரமனே நம

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான சர்வசித்து வருடம் சித்திரை மாதம் 24ஆம் நாள் (07.05.2007) திங்கட்கிழமை காலை 9.10 மணி முதல் 10.20 மணிவரையுள்ள மிதுன இலக்கினமும், சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்தவேளையில்

மணமகன்
திரு. திருமதி சோதிலிங்கம்
தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வன்
**கீர்த்திசிங்கன்**
அவர்களுக்கும்



மணமகள்
திரு. திருமதி சாந்தகுமாரன்
தம்பதிகளின் புதல்வி
**சாந்தினி**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு வண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் மணி மண்டபத்தில் (நாச்சிமார் கோயில்) திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்:

தற்காலிக முகவரி
திரு. திருமதி சோதிலிங்கம் குடும்பம்
(பிறவுண் & கொம்பனி லிமிட்டெட்)
638/4, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 077 6179133
நிரந்தர முகவரி : கரம்பைக்குறிச்சி, வரணி

திரு. திருமதி சாந்தகுமாரன் குடும்பம்,
(தீயணைப்பு சேவை, யாழ். மாநகரசபை)
திரு. இ.வே.கந்தசாமிப்பத்தர்,
555/3, காங்கேசன்துறை வீதி,
நாச்சிமார்கோயிலடி, மதவடி லேன்,
யாழ்ப்பாணம்.

(இரு வீட்டார் அழைப்பு)

(60313)

---

## கண்ணீர் அஞ்சலி



எமது சக தோழர் பொ.பத்மநாதன்
(நல்லூர் ப.நோ.கூ.சங்க லொறிச் சாரதி)
அவர்களின் அன்புத் தாய்

**திருமதி பொன்னுத்துரை சோதிரத்தினம்**

அவர்களின் மறைவினால் அவரது குடும்பத்தினருக்கு ஏற்பட்டுள்ள துயரில் நாமும் பங்குகொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம்,
கிளை - நல்லூர் ப.நோ.கூ. சங்கம்.

(60317)

---

## 45ஆவது நிறைவு நாளில் எங்களது விழிசுரக்கும் செந்நீரால் நாம் செலுத்தும் அஞ்சலிகள்

மதுர வாழ்வுக்காக வந்தது
18 - 04 - 1955



அமர வாழ்வுக்காகச் சென்றது
22 - 03 - 2007

## திருமதி வசந்தராதேவி தம்பிமுத்து

அம்மா என்று இல்லையென்றால்
இம்மா நிலத்தினிலே நாங்களில்லை
உங்களின் நினைவோடு வாழுகிறோம்
நீங்கள் எங்கள் தெய்வமம்மா.

66/6, 5ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்,
சகோதரர்கள்.

(60247)

---

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்மேரி உமாகரன்

சுவிஸில் வசிக்கும் திருமதி அன்மேரி உமாகரன் 02.05.2007 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் வைத்திலிங்கம் உமாகரனின் அன்பு மனைவியும் சாராரக்ஷனா, ரனித்தா ஆகியோரின் பாசமிகு தாயும் திரு. திருமதி வைத்திலிங்கம் உமாதேவி தம்பதியரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.05.2007) சனிக்கிழமை பிற்பகல் 5.30 மணியளவில் சுவிஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்போதைய முகவரி:
26/1, கம்பஸ் லேன்
திருநெல்வேலி.

தகவல்
பா. வைத்திலிங்கம்
ஏழாலை மேற்கு,
சுன்னாகம்.

(6038)

### திருமதி பொன்னுத்துரை சோதிரத்தினம்



மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், டச்றோட், கோப்பாய் தெற்கு, கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுத்துரை சோதிரத்தினம் நேற்று (04.05.2007) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் பத்மலீலா, பத்மநாதன்(நல்லூர் ப.நோ.கூ.ச. லொறிச் சாரதி), இந்திரநாதன், இந்திராணி (சுவிஸ்) ரவீந்திரநாதன், ரத்தினேஸ்வரி(லண்டன்), ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற செல்வநாயகம், பூரணகுணரேவதி, நித்தியகலா, சுந்தரலிங்கம் (சுவிஸ்), சாரதா(சுவிஸ்), ஆகியோரின் மாமியும் பஹீர், அகில், கிருபா, சொரூபா(சுவிஸ்), ஷபிதா, விஜிதா, பாஸ்கர், கஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (05.05.2007) சனிக்கிழமை பிற்பகல் 1.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"அன்னை இல்லம்",
டச்றோட்,கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

தகவல்:
பொ.பத்மநாதன்
(மகன்)

(60316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## இலங்கையின் அராஜகங்கள் சர்வதேச மட்டத்தில் அம்பலம்

தென்னிலங்கையிலும், அரசுப் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள தமிழர் தாயகப் பிரதேசங்களிலும் வகை தொகையின்றி இடம்பெறும் மனிதப் படுகொலைகள், கேட்டுக் கேள்வியின்றி நடைபெறும் ஆட்கடத்தல்கள், அச்சுறுத்திப் பணம் பறித்தல் போன்ற மிக மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்துப் பல மட்டங்களிலும் குரல் எழுப்பப்பட்டு வருகிறது.

அரசுத் தரப்பில் ஒட்டிக்கொண்டிருந்தபோதிலும் மனச்சாட்சி காரணமாக, இந்த அராஜகங்களுக்கு எதிராகக் குரல் எழுப்பியோர் மேலிட அழுத்தத்துக்கு உள்ளானார்கள். அதனால் அமுக்கி வாசிக்க வேண்டியவர்களுமானார்கள்.

இந்த மனித உரிமை மீறல்களுக்கு எதிராகக் குரல் எழுப்பிய வேறு சிலரோ மோசமான அச்சுறுத்தலுக்கு உள்ளானார்கள். ரவிராஜ் எம். பி. போன்றோர் அதே மனித உரிமை மீறல் முறையின் கீழ் நிரந்தரமாகவே குரல் அடைக்கப்பட்டனர். சில ஊடகவியலாளர் மிரட்டப்பட்டனர்.

ஆரம்பத்தில் இந்தக் கொடூரங்களுக்காக கொதித்தெழுந்த வேறுசில தலைவர்களோ, தாமாகவே திடீரென அடங்கிப்போய், நாட்டில் அப்படி ஒன்றுமே தவறாக நடக்கவில்லை என்பது போல மௌனம் காக்கின்றனர். அதன் பின்னால் உள்ள மர்மங்கள் பல ஊகங்களுக்கு வழி செய்து நிற்கின்றன.

அதேவேளை, இந்த அட்டூழியங்களுக்கு எதிராகச் சளைக்காமல் குரல் கொடுத்த வேறு சில தலைவர்களுக்கு எதிராக, இல்லாததும் பொல்லாததுமான குற்றச்சாட்டுகள் அவிழ்த்து விடப்பட்டு புதுக்கதைகள் புனையப்பட்டன. அவர்களது குரல் வளையை அடக்கப் பல்வேறு எத்தனங்கள் மேற்கொள்ளப்பட்டன; மேற்கொள்ளப்படுகின்றன. அடுத்த தேர்தலில் தமது வாக்கு வங்கியைத் தக்கவைத்து உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவே இல்லாததையும் பொல்லாததையும் இட்டுக் கட்டி பெரிதுபடுத்தி அரசியல் நடத்துகின்றார்கள் இவர்கள் என்றும் இவர்கள் மீது குற்றச்சாட்டுப் பத்திரம் வாசிக்கப்பட்டது.

மேற்படி அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அரசுத் தலைமையின் ஆசியோடும் அங்கீகாரத்துடனும் ( ஏன் ஆணையோடும் கூட என்று சொல்லலாம்) இடம்பெறும் இந்த மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்து எந்தத் தலைவர்கள் என்ன நோக்கத்துக்காக குரல் எழுப்பினாலும் - வேறு தலைவர்கள் வேறு நோக்கங்களுக்காக அமைதியும் நிசப்தமும் பேணி மௌனம் காத்தாலும் - அந்த அத்துமீறல் அராஜகங்கள் எந்த மட்டத்துக்கு எட்டவேண்டுமோ, அந்த மட்டத்துக்கு எட்டிவிட்டன என்பது மட்டும் ஆறுதலான விடயம்.

சட்ட ரீதியான, இறைமையுள்ள அரசு என்று தன்னைக் கூறிக்கொண்டு, சட்டத்துக்கும் நீதிக்கும் ஒழுங்கு முறைகளுக்கும் புறம்பாக இடம்பெறும் அராஜகங்களை அரசுத் தலைமை பார்த்துக் கொண்டிருந்து அவற்றை அனுமதிப்பதையோ அல்லது மறைமுக ஆதரவும், ஆசியும், ஒத்துழைப்பும் ஊக்குவிப்பும் வழங்குவதையோ உலகம் இனிமேலும் சகித்துக்கொண்டிராது என்ற உண்மை அரசுத் தலைமைக்கு மெல்ல மெல்ல - உறைப்பாக - புரியவைக்கப்பட்டு வருகின்றது என்பது தெளிவாகியுள்ளது.

இலங்கையின் மோசமான நிலைமை கருதி ஏற்கனவே இலங்கைக்கான கணிசமான உதவிகளை ஐரோப்பிய ஒன்றியத்தின் தற்போதைய தலைமை நாடான ஜேர்மனி நிறுத்தி விட்டது.

இப்போது பிரிட்டனும் இலங்கைக்கான தனது உதவிகளை முடக்கியிருக்கின்றது என்ற தகவல் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

இலங்கையில் படுகொலைகள், ஆட்கடத்தல்கள் போன்ற மோசமான மனித உரிமை மீறல்கள் முற்றாக நிறுத்தப்பட்டு, நிலைமை மேம்பாடடைந்தால் மட்டுமே முடக்கப்பட்ட உதவிகள் உட்பட - பிரிட்டனின் பங்களிப்பு இனிமேல் இலங்கைக்குக் கிடைக்கும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டிருக்கின்றது.

தனிப்பட்ட சிலரின் வங்கிக் கணக்கில் தொகையை ஏற்றுவதற்காக அராஜகக் கடத்தல்களையும் கேட்டுக் கேள்வியின்றி கப்பம் அறவிடுதலையும் அனுமதித்தால் நாட்டின் - திறைசேரியின் - வங்கிக் கணக்கு காலாவதியாகும் என்ற உண்மையை உலக நாடுகள் இப்போது கொழும்புக்கு உணர்த்தத் தலைப்பட்டு விட்டன.

ஒரு சில நாடுகளின் உதவி தானே முடக்கப்படுகிறது. போனால் போகட்டும் என்று கொழும்பு அரசுத் தலைமை இது விடயத்தில் உதாசீனமாக நடந்து கொள்ளுமாயின், அதன் விளைவு மேலும் விபரீதமாகும் என்பதும் கவனிக்கத்தக்கது.

ஆட்சியிலிருப்போர், சட்டத்தையும் நீதியையும் கையிலெடுத்து அராஜகம் பண்ணும்போது அதைத் தட்டிக்கேட்க சர்வதேச நீதிமன்றம் வரை அரங்குகள் பல உருவாகிவிட்டன.

அத்தகைய ஓர் அரங்கின் நுழைவாசல் கதவு மட்டுமே இப்போது திறக்கப்பட்டிருக்கின்றது. அதுதான் உதவிகள் முடக்கம் என்ற கட்டுப்பாட்டு நடவடிக்கை.

நிலைமை சீரடையாவிட்டால் அது மோசமாக விரிந்து இறுகும்.

அரசுத் தலைமையின் ஒத்துழைப்புடன் கூடிய அராஜகங்களுக்கு எதிராக எழுப்பப்படும் குரல் சர்வதேசத்தின் காதுகளில் விழத் தொடங்கியிருக்கின்றது என்ற யதார்த்தம், இத்தகைய கொடூரங்களுக்கு எதிராகக் குரல் எழுப்புவோரை ஊக்குவிக்கும் ஒரு சக்தி. இந்த வெற்றிக்கு அவர்களின் முயற்சியும் ஒரு காரணம் என்பது பதிவிற்குரியது.

# பல மாவட்டங்களில் அடைமழை நீடிக்கின்றது இயல்புநிலை இரண்டாவது நாளாக ஸ்தம்பிதம்

## இதுவரை 11 பேர் பலி; 8 ஆயிரம் பேர் இடம்பெயர்வு

கொழும்பு, மே 5

தலைநகர் கொழும்பு, காலி உட்பட பல மாவட்டங்களில் இரண்டாவது நாளாக பெய்த கடும் பருவ மழை வெள்ளம் காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 11 ஆக அதிகரித்திருக்கின்றது. சுமார் 8 ஆயிரம் பேர் வீடு வாசல்களை இழந்திருக்கின்றனர்.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் காரணமாகத் தற்போது தோன்றியிருக்கும் சீரற்ற கால நிலை மேலும் 24 மணித்தியாலங்கள் தொடர்ந்து நீடிக்கும் என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. இதன்படி மேல்மாகாணம், காலி மற்றும் புத்தளம் போன்ற பகுதிகளில் கடும்மழை பெய்யும் வாய்ப்பு இருப்பதாக வானிலை அவதான நிலையம் நேற்று நண்பகல் தெரிவித்திருக்கின்றது.

காலி, மாத்தறை, களுத்துறை, கொழும்பு, புத்தளம் மற்றும் கம்பஹா போன்ற மாவட்டங்களிலும், இரத்தின புரி மற்றும் கேகாலை போன்ற மாவட்டங்களின் சில பகுதிகளிலும் தொடர்ந்தும் பலத்த இடியுடன்கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன என்று வானிலை அவதான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நேற்றுக்காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலத்துக்குள் கம்பஹாவில் 145.6 மில்லி மீற்றர் மழையும், கொழும்பு - கோட்டையில் 155.0 மில்லி மீற்றர் மழையும், களுத்துறையில் 140.0 மில்லிமீற்றர் மழையும், காலியில் 162.2 மில்லி மீற்றர் மழையும், கொழும்பு தலைமைக் காரியாலயத்தில் 113.3 மில்லி மீற்றர் மழையும், கட்டுநாயக்காவில், 129.2 மில்லிமீற்றர் மழையும் பதிவாகின.

அதியுயர் மழைவீழ்ச்சி பண்டாரகமவில் 226.7 மில்லிமீற்றராகப் பதிவாகியுள்ளது.

மட்டக்களப்பு மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களில் உள்ள நீர்ப்பாசன குளங்களில் நீர் நிரம்பி வழிந்தோடும் நிலை தோன்றியுள்ளது.

புத்தளம் மற்றும் தென் பிராந்தியங்கள் உட்பட இலங்கையின் மேலும் பல இடங்களில் எதிர்வரும் நாட்களில் கடும் மழை பெய்யக்கூடும் என வானிலை அவதான நிலையம் தெரிவித்திருப்பதன் மூலம் இது மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

களுத்துறை வாதுவை ரயில் நிலையத்திற்கு அப்பால் உள்ள இலத்திரனியல் ரயில் சமிக்ஞை அமைப்புகள் வெள்ளத்தால் செயலிழந்ததை அடுத்து ரயில் சேவைகள் வாதுவை ரயில் நிலையம் வரை மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

தெற்கு வங்காள விரிகுடாவில் நிலைகொண்டிருக்கும் தாழ் அமுக்கம் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. தென் மாகாணங்களில் இன்னும் அதிகளவாக மழை பெய்யும் என்றும் அந்நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

இந்த அனர்த்தம் காரணமாக இடம் பெயர்ந்தவர்களுக்கு உதவுவதற்காக அரச அதிபர்கள் மற்றும் கிராமசேவகர்கள் ஆகியோரின் ஊடாக விசேட நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

களுத்துறையில் ஆயிரம் குடும்பங்களும் கொழும்பில் 275 குடும்பங்களும் இடம்பெயர்ந்துள்ளன என்றும் கொழும்பு மற்றும் காலி மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரண உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன என்றும் அரசு தெரிவித்துள்ளது. (சி)

### வவுனியா செட்டிக்குளத்தில் துப்பாக்கிச்சூடு; ஒருவர் பலி

வவுனியா - செட்டிக்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச்சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றொரு நபர் படுகாயமடைந்திருக்கின்றார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காட்டுக்கு வேட்டையாடச் சென்றவர்கள் மீதே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகின்றது. எனினும், உயிரிழந்தவர் மற்றும் காயமடைந்தவர் உடனடியாக அடையாளம் காணப்படவில்லை. காயமடைந்தவர் வவுனியா வைத்திய சாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர் பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (சி)

## தென்மராட்சியில் வியாழன் இரவும் மினி சூறாவளி; பெரும் சேதங்கள்

தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் வியாழன் இரவும் மினி சூறாவளி வீசி பலத்த சேதங்களை ஏற்படுத்தியது. பனை மரம் ஒன்று வீட்டின் மீது வீழ்ந்ததில் குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்தார். பெரும்மளவு பயன்தரு மரங்கள் முறிந்து நாசமாகின.

பிரதேசத்தின் அனைத்துப் பகுதிகளிலும் இரவு 8.15 மணி தொடக்கம் 9.15 மணி வரை இடைவிடாது தொடர்ச்சியாக இடி மின்னலுடன் மழை பெய்து கொண்டிருந்த வேளையில் திடீரென மினி சூறாவளி வீசியது. இதனால் பல பகுதிகளில் மரங்கள் முறிந்து வீழ்ந்தன.

மட்டுவில் தெற்குப் பகுதியில் பனை மரம் முறிந்து வீட்டின் மீது வீழ்ந்ததில் அதே இடத்தைச் சேர்ந்த பத்மநாதன் கமலேஸ்வரி (வயது 48) என்பவருக்கு விலா எலும்பு முறிந்தது.

அப்பகுதியில் பனை மரங்கள் முறிந்து மின்கம்பிகள் அறுந்ததால் காயமடைந்தவர் நேற்றுக் காலையே யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

பிரதேசத்தின் பல பகுதிகளில் தென்னை, பனை மரங்களும் முருங்கை, பப்பாசி, வாழை போன்ற மரங்களும் முறிந்து நாசமாகின. சில இடங்களின் குறுக்கே மரங்கள் வீழ்ந்து போக்குவரத்துகள் தடைப்பட்டன.

இரவு இடம்பெற்ற இடி, மின்னல்களின் தாக்கம் பிரதேச மக்களைக் கதிகலங்கச் செய்தது. இடி முழக்கத்தினால் பல இடங்களில் நில அதிர்வு போன்று உணரப்பட்டதாகப் பலரும் தெரிவித்தனர்.

தமது வாழ்நாளில் இதுபோன்ற தொடர்ச்சியான இடி மின்னலைக் காணவில்லை என வயோதிபர்கள் பலர் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் பகல் பிரதேசத்தில் வீசிய மினி சூறாவளி பலத்த சேதங்களை ஏற்படுத்தியமை தெரிந்ததே.(அ-1-207)

### வெள்ளவத்தையில் திடீரென காலி வீதி நடுவே ஆழக்குழி

கொழும்பு, மே 5

கொழும்பு - வெள்ளவத்தையில் - காலி வீதியில் றொக்ஸி திரையரங்கிற்கு முன்னால் நடு வீதியில் திடீரெனப் பாரிய குழி ஒன்று உருவாகியிருக்கின்றது. சுமார் 15 அடி அகலம், 15 அடி ஆழம் கொண்ட இந்தக் குழி தரைப்பகுதியில் ஏற்பட்ட மண் இறக்கம் காரணமாக உருவாகியிருக்கின்றது. கடந்த இரண்டு நாள்களாக பெய்துவரும் கடும் மழை காரணமாகவே இந்நிலைமை ஏற்பட்டிருப்பதாக வெள்ளவத்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

போக்குவரத்து நெரிசல் மிகுந்த முக்கிய வீதியின் நடுவே ஏற்பட்ட இந்தக்குழி காரணமாக நேற்று காலி வீதியில் பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டது. இதனால் பயணிகள் பெரும் சிரமப்பட்டனர். கொழும்பிலிருந்து காலி நோக்கிச்சென்ற வாகனங்கள் ஒவ்வொன்றாகவே செல்ல அனுமதிக்கப்பட்டன.

காலியிலிருந்து வந்த வாகனங்கள் வில்லியம் மிளகாய் அரைக்கும் மையச் சந்தியில் திருப்பி விடப்பட்டுப் பின்னர் வெள்ளவத்தைப் பகுதிக்குள் அனுமதிக்கப்பட்டன. (சி)

### கொட்டாஞ்சேனையில் புலி உறுப்பினர் கைது

கொழும்பு - கொட்டாஞ்சேனைப் பகுதியில் விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர் எனச் சந்தேகிக்கப்படும் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார் என்று பாதுகாப்பு ஊடக நிலையம் தெரிவித்திருக்கின்றது.

இந்த நபர், அண்மையில் விடுதலைப் புலிகளால் கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட வான் தாக்குதல் தொடர்பாக தகவல்களைப் பரிமாற்றம் செய்தவர் என்று பொலிஸார் கூறுகின்றனர்.

இந்நபர் வழங்கிய தகவலையடுத்து வவுனியாவிலும் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (சி)

## கடுங்காற்றுடன் கூடிய பெருமழையால் வாழை, வெற்றிலை, புகையிலைச் செய்கை அழிவு

### வலி.வடக்கு, வலி.கிழக்கு விவசாயிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், மே 5

நேற்றுமுன்தினம் திடீரெனப் பெய்த கடும் மழை மற்றும் காற்றின் தாக்கத்தினால் பெருவாரியான வாழைகள், வெற்றிலைக் கொடிகள் என்பன பெரும் சேதத்திற்கு உள்ளாகின.

அன்று இரவு 8 மணிமுதல் அரை மணி நேரத்துக்கும் மேலாகப் பெரும் இடி மின்னலுடன் பெய்த மழையோடு கடும் காற்றும் வீசியமையால் கட்டுவன், புன்னாலைக்கட்டுவன், நீர்வேலி, புத்தூர், இணுவில், மருதனார்மடம், மல்லாகம், தெல்லிப்பழை போன்ற இடங்களில் வாழைகள், வெற்றிலைக் கன்றுகள் உட்பட மரக்கறிப் பயிர்களும் அடியோடு சாய்ந்து வீழ்ந்துள்ளன.

இதனால் விவசாயிகள் பெரும் நட்டம் அடைந்துள்ளார்கள். இதேபோன்று அறுவடை செய்யப்படாதிருந்த புகையிலைக் கன்றுகளும் அழிவுற்றன.

**காவலரண்களும் சேதம்**

இதேவேளை-

மழை மற்றும் காற்றுக் காரணமாக வல்லைவெளிப் பகுதிகளில் இருந்த இராணுவக் காவலரண்களும் சேதமாகின.

காவலரண்களில் உள்ள கூரைகளுக்கு வேயப்பட்டிருந்த தகரங்கள் காற்றினால் தூக்கி வீசப்பட்டு சேதத்திற்கு உள்ளாகின.

இத்துடன் வல்லைவெளிப் பகுதியில் உள்ள பயணிகள் சோதனைக் கொட்டகையும் தூக்கி வீசப்பட்டு சேதமடைந்துள்ளது.

இதேபோன்று நீர்வேலிச் சந்தியில் அமைந்துள்ள பஸ்தரிப்புக் கொட்டகையும் சேதமடைந்திருந்ததைக் காணக்கூடியதாகவிருந்தது. (அ-202-68)

### சில்லாலை - யாழ். பஸ்சேவை குறைப்பு; பயணிகள் பெரும் அசௌகரியம்

முன்னர் தினமும் நான்கு சேவைகளாக நடத்தப்பட்டு வந்த யாழ்ப்பாணம்- சில்லாலை (791 இலக்க) பஸ் சேவை தற்போது காலை 6.30 மணிக்கு மட்டுமே சில்லாலையிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நடத்தப்பட்டு வருகின்றது.

வேறு போக்குவரத்துச் சேவைகள் எதுவும் இப்பாதை வழியாக நடைபெறாமையால் பிரயாணிகள் போக்குவரத்துச் செய்வதில் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பிற்பகலில் பண்டத்தரிப்புச் சந்தியில் இறங்கிச் சில்லாலை வரை சுமார் 2 கிலோமீற்றர் தூரம் நடந்து செல்ல வேண்டியுள்ளதாக பிரயாணிகள் கவலை தெரிவிக்கின்றனர். பிற்பகல் 3 மணியளவில் யாழ்.நகரில் இருந்து மேலும் ஒரு சேவையை நடத்தி உதவுமாறு சில்லாலை பஸ் பிரயாணிகள் சங்கம் வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பொதுமுகாமையாளரைக் கடிதம் மூலம் கோரியுள்ளது. (அ-1-135)

### நாளை

| | |
|---|---|
| சித்திரை - 23 | ஞாயிற்றுக்கிழமை 06.05.2007 |
| திதி: சதுர்த்தி | முன்னிரவு : 08.13 |
| நட்சத்திரம்: | மூலம் பின்னிரவு : 02.55 |
| சுபநேரம் | 08.58 - 10.28 |
| ராகுகாலம் | 04.28 - 05.58 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைக்கு ஒத்த தீர்வே ஈ.பி.டி.பியின் யோசனை

கொழும்பு, மே 5

தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு ஒத்ததான ஒரு தீர்வையே ஈ.பி.டி.பி. ஆரம்பம் முதல் வலியுறுத்தி வருகின்றது. அந்த அடிப்படையிலான தீர்வு யோசனையையே ஈ.பி.டி.பி. முன்வைக்கின்றது. அக்கட்சியின் அரசியல் உயர்குழு நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பு ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

அதில் மேலும் கூறப்பட்டிருப்பவையாவது:-

தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமைப் பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இத்தருணத்தில் அனைத்து அரசியல் கட்சிகளும் தங்களது தீர்வு யோசனைகளை முன்வைத்து வருகின்றன. இதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் தமது கட்சி சார்ந்த தீர்வு யோசனையினை வெளியிட்டிருக்கின்றது.

ஈ.பி.டி.பி.யினராகிய நாம் ஜனநாயக வழிமுறைக்கு திரும்பியிருந்த ஆரம்பங்களிலிருந்து எமது மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு ஒத்ததான தீர்வினை வலியுறுத்தி வருகின்றோம்.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்னரான எமது ஜனநாயக வழிமுறைச் செயற்பாடுகளின்போது மாறி மாறி வந்த அரசுகளிடம் அரசியலுரிமைப் பிரச்சினைக்கான தீர்வு எதுவாக இருக்க முடியும் என்பதைத் தெளிவாக எழுத்து மூலம் சமர்ப்பித்திருக்கின்றோம். இதையே மஹிந்த ராஜபக்ஷவின் முயற்சியினால் முன்னெடுக்கப்பட்டுவரும் சர்வகட்சி மாநாட்டிலும் சமர்ப்பித்திருக்கின்றோம்.

இது குறித்து நாம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் தென்னிலங்கை அரசியல் கட்சி பிரமுகர்களிடமும் சர்வதேச சமூகத்தின் முன்னிலையிலும் அடிக்கடி எமது கருத்தினையும் நடைமுறைச் சாத்தியமான யோசனைகளையும் தெரிவித்து வருகின்றோம்.

கடந்த 2ஆம் திகதி அன்று எமது கட்சியின் செயலாளர்நாயகமும், அமைச்சருமான தோழர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பின் போது நாம் கொண்டிருக்கும் தீர்வு யோசனைகள் குறித்து எடுத்து விளக்கியிருந்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி தீர்வுயோசனை ஒன்றை முன்வைத்திருப்பதாகவும், ஆனாலும் சர்வகட்சி மாநாடுதான் அதற்கான இறுதித் தீர்மானத்தை எடுக்கும் எனவும், சர்வகட்சி மாநாட்டின் மூலம் நியாயமான ஒரு தீர்வை உருவாக்க முடியும் என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

எமது கட்சியின் அரசியல் திட்டத்தின் பிரகாரம் நாம் கொண்டிருக்கும் நிலைப்பாடு தமிழ் பேசும் மக்களின் அரசியல் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கான பூரண ஏற்பாடாகவே இருக்கின்றது.

''வடக்கு - கிழக்குதமிழ் பேசும் மக்களின் வரலாற்று வாழ்விடம். வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணங்களுக்கான விஷேட அதிகாரங்கள் இணைந்த வடக்கு - கிழக்கு நிர்வாக அலகிற்குள் முஸ்லிம் மக்களுக்கான அகச்சுயாதிக்க அலகு.

இதன் அடிப்படையில் நடைமுறைச் சாத்தியமான வழிமுறையில் மூன்று கட்ட நகர்விற்கு ஊடாக மத்தியில் கூட்டாட்சி! மாநிலத்தில் சுயாட்சி!! என்ற இறுதி இலக்கை நோக்கிய நகர்விற்கு அடித்தளம் இடுவதே ஈ.பி.டி.பி.யின் அரசியல் இலக்கு. இதுவே எமது அரசியல் தீர்மானம். இதே வேளை, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் வடக்கு - கிழக்கு இணைப்பு குறித்து அம்மக்களின் தீர்மானத்திற்கு விடுவதற்கான ஜனநாயக சூழ்நிலை எழுமேயானால், அவ்வாறான சூழலில் அம்மக்களின் ஜனநாயகரீதியிலான தீர்மானத்தை ஈ.பி.டி.பி. ஏற்றுக்கொள்ளும். - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# ரணில் – சொல்ஹெய்ம் பிரசெல்ஸில் சந்திப்பு

நோர்வே சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்மை எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்துப் பேசியிருக்கின்றார்.

பிரசெல்ஸ் நகரில் வியாழக்கிழமை இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

எனினும், இச்சந்திப்பு திட்டமிட்ட சந்திப்பு அல்ல என்றும் இருவரும் வளரும் நாடுகளின் கல்வி தொடர்பான ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் உலக வங்கியின் கூட்டுமாநாட்டில்பங்கேற்றபோது இச்சந்திப்பு நடந்தது என்றும் ஐக்கிய தேசியக்கட்சியினர் தெரிவித்தனர்.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார உறவுகளுக்கான பொறுப்பாளர் பெனிட்டா பெர்ரிரோவையும் ரணில் விக்கிரமசிங்க சந்தித்துப் பேசினார்.

## காணாமற் போன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டதாகக் கூறப்படும் ஒரு மீனவரின் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அடங்கிய வீடியோ பிரதி ஒன்றை தமிழகக் காவல்துறையினர் நேற்று வெளியிட்டனர். இந்த மீனவர்களை விடுதலைப் புலிகள்தான் கடத்தினார்கள் என அந்த குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளதாகஇந்தியப் பத்திரிகைகள் நேற்று செய்தி வெளியிட்டுள்ளன.

மீனவர்கள் கடத்தல் குறித்து மத்திய புலனாய்வுத் துறையின் முன்னாள் இயக்குநர் கார்த்திகேயன், கூறியதாவது:-

இந்தியக் குடிமக்களை எவர் கடத்தினாலும், அவர்கள் மீது சாம, பேத, தான, தண்ட முறைகளைப் பயன்படுத்தி இந்தியக் குடிமக்களை மீட்பது இந்திய அரசின் கடமை - என்றார் (அ-1)


## இரவு மேற்பார்வையாளர்

கொழும்பில் இயங்கும் பத்திரிகை நிறுவனம் ஒன்றில் இரவு நேரப்பணிகளை மேற்பார்வை செய்வதற்காக இரவு நேர மேற்பார்வையாளர் பதவிக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ கொழும்பில் தங்குமிட வசதி தரப்படும்.
★ உணவுக்கான கொடுப்பனவுகளும் அனுமதிக்கப்படும்.
★ சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

தகைமைகள்

★ முப்பது வயதுக்கு மேற்பட்ட ஆண்கள்
★ இரவு கடமை புரிவதற்கு ஏற்ற உடல் ஆரோக்கியம்
★ இரவு நேரப் பணிகளை முகாமை செய்து நிலைமைக்கு ஏற்ப முடிவுகளை எடுத்துச் செயற்படுத்தும் திறமை
★ பத்திரிகைத்துறைப் பணிகள் தொடர்பான முன் அனுபவம் இருப்பின் முன்னுரிமை
★ விண்ணப்பதாரர் சுயமாகத் தயாரித்த விண்ணப்பப்படிவத்துடன் உறவினர் அல்லாத இருவரது நற்சான்றிதழ்களையும் சேர்த்து அனுப்பவேண்டும்.

விண்ணப்பங்களை
விளம்பர இலக்கம் 2515,
மே/ பா உதயன், 361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு 11.05.2007 இற்கு முன் அனுப்பி வைக்கவும்.


## இலங்கைக்கான உதவிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனித உரிமை ஆர்வலர்கள், கண்காணிப்புப் பிரதிநிதிகள், மனிதாபிமான பணியாளர்களை அச்சுறுத்தி மிரட்டியும் -

அரச ஆதரவுடன் அரசுப்படைகள் திட்டமிட்டு ஒழுங்கு முறையாக மேற்கொண்டு வரும் மோசமான மனித உரிமை மீறல்களைக் கட்டுப்படுத்தி, நிலைமையை ஒழுங்கு படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள முக்கிய - குறிப்பிடத்தக்க - நடவடிக்கை இதுவாகும் என மனித உரிமைகளுக்கான ஆசிய மையத்தின் பணிப்பாளர் சுஹாஸ் சக்மா தெரிவித்தார்.

மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமானச் சட்டங்கள் போன்றவை மீறப்படுகின்றமை குறித்து அதிக சிரத்தை எடுக்கவும், அமைதி முயற்சி களை சமாதானத் தடத்துக்குக் கொண்டுவரவும் இலங்கைக்கு அழுத்தம் கொடுத்துத் தூண்டும் வகையில் மனிதாபிமான உதவித் திட்டங்களைத் தவிர, ஏனைய அனைத்து உதவிகளையும் பிரிட்டனைப் போல இந்தியா, ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா மற்றும் ஐ.நா. அமைப்புகள் அனைத்தும் நிறுத்த வேண்டும். - என்று அந்த அமைப்பு கோரியுள்ளது.

## மனித உரிமைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதையும் சர்வதேச நாடுகள் தெளிவாக விளக்கியுள்ளன.

அந்நாடுகள் மனித உரிமை மீறல்களைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கையில் தற்போது ஈடுபட்டுள்ளன. அதன் முதற்கட்டமாகவே பிரிட்டன் இலங்கைக்கு வழங்க விருந்த நிதியுதவியை முடக்கியுள்ளது. மனித உரிமை மீறல்கள் முற்றாக நிறுத்தப்பட்டால் மாத்திரமே அந்நிதி வழங்கப்படும் என்றும் பிரிட்டன் தெரிவித்திருக்கின்றது.

இது இலங்கைக்கு விழுந்த பாரிய அடியாகும். பிரிட்டனைத் தொடர்ந்து ஏனைய நாடுகளும் இலங்கைக்கான நிதி உதவிகளை நிறுத்தலாம்.

இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாப்போம் என்று சர்வதேச நாடுகளுடன் இலங்கை அரசு ஒப்பந்தம் ஒன்றைச் செய்தது. அந்த ஒப்பந்தத்தை மீறிவிட்டே மனித உரிமை மீறல்களில் அரசு ஈடுபடுகின்றது.

இலங்கை அரசின் இந்தச் செயற்பாடு தொடருமேயானால் அனைத்து நாடுகளும் நிதியுதவிகளை நிறுத்திவிடும். அந்நிலைமை ஏற்பட்டால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி யடைந்துவிடும்.

அது மாத்திரமின்றி சுற்றுலாத்துறை வளர்ச்சியிலும் வெளிநாட்டு முதலீடுகளிலும் வீழ்ச்சி ஏற்படுவதை எவராலும் தடுக்க முடியாது.

இந்த நாட்டு மக்களை இருண்ட யுகத்தினுள் தள்ளிவிடாமல் நாட்டை அபிவிருத்தி செய்வதற்கு ஏதுவான வகையில் மனித உரிமை மீறல்களை இலங்கை அரசு உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் கூறினார். (சி)

# சங்கரி - சித்தார்த்தன் அணி ஜனாதிபதியுடன் சந்திப்பு

கொழும்பு, மே 05

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ். பத்மநாபா பிரிவு செயலாளர் சிறிதரன் ஆகியோர் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்துப் பேசியிருக்கின்றனர்.

''இலங்கையின் இனப்பிரச்சினைக்கு இணைந்த வடகிழக்கில் சமஷ்டி முறையே நல்ல தீர்வாக அமையும்'' - என்று அவர்கள் மூவரும் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டினராம். சுதந்திரக் கட்சி முன்வைத்துள்ள தீர்வு யோசனைகள் தொடர்பாக தமது திருப்தியை இம்மூவரும் ஜனாதிபதியிடம் வெளிப்படுத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களின் கருத்தைக் கூர்மையாகச் செவிமடுத்த ஜனாதிபதி ''ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினால் முன்வைக்கப்பட்ட யோசனைகள் அரசின் தீர்வுத்திட்டம் அல்ல. அது சுதந்திரக் கட்சியின் தீர்வுத்திட்டம்'' என்று பதில் விளக்கம் தந்தார் என்றும் தகவல்கள் வெளியாகின.

## தமிழர் தரப்பு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தடைவிதித்து ஆறு வருடங்கள் கழிந்துவிட்டன. தடை குறித்து மறுபரிசீலணை செய்வதற்கான காலம் வந்துவிட்டது. அவ்வாறு செய்வதன் மூலமே தீர்வுக்கான பேச்சுவார்த்தையை நிச்சயப்படுத்திக் கொள்ள முடியும் - என்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜெரிம கோர்பயின், சைமன் ஹியு ஆகியோரும் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதே பேச்சுமூலமான தீர்வுக்கு உதவும் என்று தெரிவித்தனர்.

அமைப்பு ஒன்று சட்டரீதியற்றது என்று பிரகடனப்படுத்துவது சமாதானப் பேச்சுக்கு உதவமாட்டாது.

''மோசமான சரித்திரத்தை'' அழுத்திப் பிடித் துக் கொண்டிருப்பதன் மூலம் ஒரு தரப்புடன் பேச்சு நடத்தாமல் பின்னடிப்பதால், எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை. ஐ.ஆர்.ஏ. அமைப்பை தடை செய்ததன் மூலம் வட அயர்லாந்துப் பிரச்சினை கூர்மையாக்கப்பட்டதை நாமே அனுபவத்தில் கண்டிருக்கிறோம் - என்று அவர்கள் இருவரும் எடுத்துக் காட்டினர்.

ஆனால் கொன்சர்வேட்டிவ் கட்சியைச் சேர்ந்த கிளேய்ரன் பிறவுண் என்ற எம்.பியைத் தவிர அக்கட்சியின் ஏனைய பல உறுப்பினர்களும் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்படக் கூடாது என்று அடித்துக் கூறினார்கள்.

**வெளிவிவகார அமைச்சர் மறுப்பு**

வெளிவிவகார அமைச்சர்கிம் ஹவெல்ஸ் பேசுகையில், விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க முடியாது என்று வலியுறுத்தினார்.

பயங்கரவாதம் சொல்லிலும் செயலிலும் துறக்கப்படும் வரைக்கும் விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது என்ற கேள்விக்கே இடமில்லை.

தற்கொலைக் குண்டுத்தாரிகளுக்கும் கொலைகாரர்களுக்கும் சித்திரவதைக் காரருக்கும் சட்ட அங்கீகாரம் வழங்குவது என்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது - என்றார்.

விடுதலைப் புலிகளுடன் உத்தியோக பூர்வமற்ற பேச்சுகள் நடைபெற்ற போதிலும் உத்தியோக ரீதியாக பேச்சுகளைப் போன்று பயன்தரமாட்டா. ஆகவே விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது அவசியம் என்று ஜோன் மக்டொனால்ட் (தொழிற்கட்சி) எம்.பி. எடுத்துரைத்தார். இந்தத் தடை இலங்கை இனப்பிரச்சினையை மேலும் பூதாகாரமாக்கியது என்பதனை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

அதற்கு பதிலளிக்கும் வகையில் பேசிய வெளிவிவகார அமைச்சர், விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவதனால் இனப்பிரச்சினைக்கான சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்ல முடியுமாயின் அது குறித்து அக்கறையுடன் ஆராயலாம் - என்று கூறினார்.

**உள்நாட்டு அமைச்சரின் நிலைப்பாடு**

உள்நாட்டு அமைச்சர் பேசுகையில் -

விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்குவது குறித்து அரசுக்கு வெறுப்பு எதுவும் இல்லை. வேண்டுமானால் பயங்கர வாதத் தடைச் சட்டத்தில் உள்ள சரத்துக்களைப் பயன்படுத்தி அவர்கள்தம் மீதான தடையை நீக்குவதற்குப் பயன்படுத்த முடி யும். அதற்கான சாத்திய நிலை ஒன்று அண்மையில் உருவாகியுள்ளது. சட்டத்துக்கான எதிராக ஏற்கனவே எழுந்த ஒரு சவால் விடுதலைப் புலிகளை 'புதிய எல்லைக்குள்' கொண்டு வந்துவிட்டுள்ளது - என்றார். (அ)

## புலிகளின் விமானங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இளைப்பாறவும் வலைகளை உலர்த்தவும் உரிமை உண்டு. சமீபகாலமாக இந்திய மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்குவதாகத் தகவல்கள் வந்தபோதிலும் கச்சத்தீவு குறித்து இலங்கையுடன் விவாதிக்கப் போவதில்லை - என்றார் அவர். (அ-1)

## அனைத்துக் கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து அதிகாரங்கள் பரவலாக்கப் பட்டு இறுதி ஆவணம் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான சரியான இணக்கம் ஏற்படும் என்று நான் நம்புகின்றேன் - என்றார் திஸ்ஸ விதாரண. (சி)

## பிரிட்டனின் முடிவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் முன்னெடுத்துச்செல்லும் நடவடிக்கைகளை நியாயப்படுத்துவதற்குப் போதுமான காரணங்கள் எம் மிடம் உள்ளன. மனித உரிமை மீறல்களை முற்றாக இல்லா தொழிப்பதில் அரசு கூடிய கவனம் செலுத்தி வருகின்றது.

புலிகள் மேற்கொண்டுவரும் பயங்கரவாத நடவடிக்கையை முறியடிப்பதற்காக அரசு மேற்கொண்டுவரும் இராணுவ நடவடிக்கையை மனித உரிமை மீறல் என்று சொல்ல முடியாது.

இந்த வகையான இராணுவ நடவடிக்கையை மனித உரிமை மீறல் எனக்கருதி பிரிட்டன் நிதியுதவியை நிறுத் தியதை இட்டு நாம் கவலையடைகின்றோம். இருப்பினும், இதன் உண்மையான பின்னணி என்னவென்று நாம் ஆராயவுள்ளோம் - என்றார். (சி)


ONLINE CLASSES FOR TEACHERS

DIPLOMA IN MICROSOFT OFFICE
DIPLOMA IN HARDWARE

Start on: 07.11.05.2007 4p.m

Softview Computer College
55, Arasady Rd, Jaffna.
T.P: 021 2225170


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, திரு உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.05.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.